1974 சனவரி 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதற்காக ஏறக்குறைய 5 லட்சம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பண வசூல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குழு அமைத்துக் கொண்டிருக்கிறோம். குழு அமைப்பது பற்றி முடிவு அறிவித்த வுடன் காரியங்கள் நடைபெறும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பம்பாய்க்கு அடுத்தாற்போல் தமிழ்நாட்டில் இம்மாதிரி சட்டம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டுக் காலம் ஆகிறது. அரசு 5 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதோடு முதலாளிகள் இதற்கு கொடுத்த பணம் மற்றவை யெல்லாம் சேர்ந்து கைக்குக் கிடைத்த பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தனிக் கேள்வி போட்டால் விளக்கங்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

Labour Legal Advisory Cells

* 59 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have ordered the setting up of any Labour Legal Advisory Cells in this State; and

(*b*) if so; the details thereof.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) தொழிலாளர் பிரச்சினைகளில் நடவடிக்கை எடுத்துக் கொள்வது தொடர்பாகத் தொழிலாளர்களுக்கு இலவச ஆலோசனை கூறும் நோக்கத்துடன் தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் மூன்றை சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழிலாளர் நீதிமன்றம் ஒன்றில், அல்லது தொழில் நடுவர் மன்றம் ஒன்றில் விசாரணை அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரி ஒருவரும், ஓய்வுபெற்ற தொழிலாளர் நல அதிகாரி ஒருவரும் இந்தத் தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்களில் பணியாற்றுவர்.

(முற்பகல் 10.00)

திரு. என். டென்னிஸ்: லேபர் லாஸ் படித்தவர்களும், தொழிலாளர் நலனில் அக்கறை உள்ளவர்களும் இதில் அங்கம் வகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

[1974 சனவரி 21

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இதைப் பொறுத்த வரையில், ஓய்வுபெற்ற நீதிபதிகளும் ஓய்வுபெற்ற முன்னாள் தொழிலாளர் துறை அலுவலர்களும்தான் இதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் சொன்னதைப் போன்று அப்படிப் பட்டவர்களை இந்தக் குழுவில் நியமிக்கவேண்டுமென்ற எண்ணம் இதுவரையில் அரசுக்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழு என்ற இந்தக் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்கள்? எந்தெந்தப் பகுதிகளில் இருப்பவர்கள், என்னென்னமாதிரியான தகுதிகள் உள்ளவர்கள் அதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இப்போது அதற்கான முறையில் நான்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளும், நான்கு ஓய்வுபெற்ற லேபர் ஆபீசர்களும் அதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றவுடன் அவர்கள் வேலை செய்யத் தொடங்குவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் குழுக்கள் முக்கியமாக நகரங்களில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தொழிலாளர்கள் பல்வேறுயிடங்களில் இம்மாதிரியான சட்ட ஆலோசனைகள் இலவசமாகக் கிடைக்காத காரணத்தினால் முதலாளிகளோடு போராடுவதற்கு வழியில்லாததொரு தயக்க நிலை இருக்கிறது. ஆகவே எல்லாயிடங்களிலும் தொழிலாளர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு இலவச ஏற்பாட்டினை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்தக் குழுவைப் பொறுத்தவரையில் சென்னை, மதுரை, கோவை போன்ற தொழிலாளர்கள் பெருத்த நகரங்களில் இது உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொல்லைகள் தொழிலாளர்களுக்கு அதிகமாக வருமானால் மற்ற இடங்களுக்கும் விரிவாக்கப்படுவதற்கு அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

1974 சனவரி 21]

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தச் சட்ட ஆலோசனைக் குழு வானது தனிப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்கு கிறதா. அல்லது தொழிற்சங்கங்களுக்கு ஆலோசனை வழங்கு கிறதா? அதுபற்றி விதிகள் ஏதாவது வகுக்கப்பட்டிருக் கின்றனவா? ஆலோசனைகள் வழங்குவது, வாய்மொழி ஆலோ சனைகள் மட்டும்தாஞ அல்லது ஸ்டேட்மெண்ட் போன்றவைகள் தயாரித்துக்கொடுக்கிற முறைகளிலும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தக் குழுக்களைப் பொறுத்து, இது தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும். தொழிலாளர்கள் சங்கம் தனித்தனி சட்ட ஆலோசகர்களை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். ஆகவே, அவர்களுக்கு அதிகம் தேவை இருக்காது. தனிப்பட்ட தொழிலாளர்கள் விரும்புவார் களேயானுல் அவர்களுக்கு இந்தக் குழுக்கள் உதவி செய்யத் தயாராயிருக்கின்றன. தொழிற்சங்கங்களும் விரும்பினுல் அவர்களுக்கும் உதவி செய்ய இந்தக் குழுக்கள் தயாராயிருக் கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதிமுறைகள் இதிலே இணைக்கப்பட்டிருக்கின்றன.

Minimum wages for employment in Plantations.

* 60 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to revise the rates of minimum wages for workers of Rubber, Tea and Coffee Plantations in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) தோட்டத் தொழிலில் (காபி, டீ, ரப்பர்) ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் களுக்கு குறைந்த பட்சம் ஊதியம் நிர்ணயம் பற்றி அரசுக்கு ஆலோசனை கூற குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் 5 (1) (a) பிரிவின்படி ஒரு பரிந்துரை குழுவை அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. என். டென்னிஸ் : அந்தக் குழு எப்போது அறிக்கை சமர்ப்பிக்கும்? இது எப்போது நடைமுறையில் வரும் என்று எதிர்ப்பார்க்கலாம்.